

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜெபராஜ் சாலைப் பகுதியில் நேற்று முன்தினம் (11.042025), மதுரை–தூத்துக்குடி சாலை கி.மீ132/6ல் தூத்துக்குடியில் சாலை மேம்பாலம் கட்டும் பணியில் தூத்துக்குடி பக்கம் மற்றும் ஜெபராஜ் சாலைப் பகுதியில் பயனுறு சாலை அமைக்கும் பணியினை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தொடங்கி வைத்தார். உடன் திருநெல்வேலி கோட்டப்பொறியாளர்(திட்டங்கள்) திருலிங்கசாமி, தூத்துக்குடி உதவிகோட்டப்பொறியாளர் (திட்டங்கள்) திருமதி உமாதேவி, இளநிலைபொறியாளர் அம்ஜத்கான் ஆகியோர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவரிகளிடம் முகாம் அலுவலகத்தில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தமது புதல்வியும் மணமகளுமான டாக்டர் ஜெ.எஸ்.அக்ஸ்டி மேரீஸ் பிரியங்காவின் மணவிழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி பாக முகவர்கள் கூட்டம் பழங்காநத்தத்தில் நடைபெற்றதில் மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், சோமசுந்தர பாண்டியன், தனசெல்வம், நேரு பாண்டியன், வீர கணேசன், ஆர்.கணேசன், மதுரை பாலா, மேயர் இந்திராணி பொன் வசந்த், மூவேந்திரன், சுதன், மதிவெங்கடேஷ், அன்பழகன், தவமணி, காவேரி, சசிகுமார், மருது பாண்டியன், சிறைச்செல்வன், ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி, என்.எஸ்.மணி, சுவிதா விமல், பாண்டிச்செல்வி பாண்டியன், சரவணபுவனேஸ்வரி, ஐயப்பன், பரவை அன்புச் செல்வன் மற்றும் திரளான பி எல் ஏ 2, பி எல் சி பாக முகவர்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### தூத்துக்குடி: பக்கம் – ஜெயராஜ் சாலைப் பகுதியில்

# ரூ.94.54 இலட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தொடங்கி வைத்தார்!

தூத்துக்குடி, ஏப்.13-

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜெயராஜ் சாலைப் பகுதியில் நேற்று முன்தினம் (11.04.2025), மதுரை-தூத்துக்குடி சாலை கி.மீ132/6ல் தூத்துக்குடியில் சாலை மேம்பாலம் கட்டும் பணியில் தூத்துக்குடி பக்கம் மற்றும் ஜெயராஜ் சாலைப் பகுதியில் பயனுறு சாலை அமைக்கும் பணியினை சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தொடங்கி வைத்தார்.

மீளவிட்டான் தூத்துக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே கி.மீ 651/12-13 இருப்புப்பாதை கடவு எண்.485க்கு பதிலாக, மதுரை - தூத்துக்குடி சாலை கி.மீ132/6ல் தூத்துக்குடியில் சாலை மேம்பாலம் கட்டும் பணியில் தூத்துக்குடி பக்கம் மற்றும் ஜெயராஜ் சாலை பகுதியில் பயனுறு சாலை அமைக்கப்படவுள்ளது.

மேலும், மேம்பாலம் கட்டுமானப் பணியானது ரூ.20.27 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, தூத்துக்குடி பக்கம் மற்றும் ஜெயராஜ் சாலைப் பகுதியில் 400 மீட்டர் நீளத்திற்கு ரூ.94.54 இலட்சம் செலவில் பயனுறு சாலை அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி கோட்டப் பொறியாளர்(திட்டங்கள்) லிங்கசாமி, தூத்துக்குடி உதவி கோட்டப்பொறியாளர்(திட்டங்கள்) திருமதி உமாதேவி, இளநிலைப் பொறியாளர் அம்ஜெத்கான் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒன்றிய,நகர,பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சுரண்டை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டச் செயலாளர் வி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன் ஆலோசனை வழங்கினார். தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர் பொன் செல்வன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அழகுதமிழ் சங்கர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் சிவன் பாண்டியன், செல்லத்துரை, மாரிவண்ண முத்து, ஜெயக்குமார்,மகேஷ் மாயவன்,பேரூர் செயலாளர்கள் அழகேசன், ஜெகதீசன்,ஆர்.எல். லட்சுமணன்,நெல்சன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் சிங்கதுரை,தொகுதி ஒருங்கிணைப்பாளர் மகேஷ் பாண்டியன், சீமான்,உச்சி மா.காளி, ஐயப்பன், பரமகல்யாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.


